මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office (94)-11-2484500 (94)-11-2484600 (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No. SA/MA/AA/Circular 2015
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 2015.06.24

**அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம்:- 243/2015**

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள் மற்றும்
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்

**<u>பாராளுமன்றத்தின் பொது நிதிக் கட்டுப்பாட்டை வலுவூட்டல்</u>**

அரசியலமைப்புச் சட்டத்தின் 148 ஆம் பிரிவின் பிரகாரம் பொது நிதி சம்பந்தமான முழுமையான கட்டுப்பாடு பாராளுமன்றத்திற்குரியதாக இருக்கின்ற அதேவேளையில், அதன் பிரகாரம் அரசாங்கத்தின் வருமானத்தைத் திரட்டுதல் மற்றும் செலவினத்தை மேற்கொள்ளுதல் என்பன பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2.அரசியலமைப்புச் சட்டத்தின் 149(1) ஆம் பிரிவின் பிரகாரம் உரிய பணிக்காக சட்டத்தின் மூலம் ஒதுக்கப்படாத சகல வருமானங்களையும் அரசாங்கத்தின் திரட்டிய நிதியத்திற்கு பற்றுவைக்க வேண்டிய அதேவேளையில் திரட்டிய நிதியத்திலிருந்த செலவினத்தை மேற்கொள்ளும் போது மேற்சொன்ன அரசியலமைப்புச் சட்டத்தின் 149(2) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற ஒதுக்கீட்டுச் சட்டம் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள செலவினத்தை மாத்திரம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

3. எவ்வாறாயினும், ஒருசில அமைச்சுக்கள் / திணைக்களங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ள வருமான மதிப்பீடுகளுக்குப் புறம்பாக பல்வேறு வித்தில் வருமானங்களைத் திரட்டுகின்ற அதேவேளையில், அவை நி.பி. 569 இன் கீழ்க் காணப்படும் III ஆம் வகுப்பின் நானாவித வைப்புக் கணக்குகளைத் தக்கவைத்துக் கொண்டு வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள செலவினங்களுக்குப் புறம்பான செலவினங்களை மேற்கொள்வதற்காக பயன்படுத்துவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

4. அவ்வாறு, வைப்புக் கணக்கின் கீழ் ஒன்று திரட்டப்படுகின்ற வருமானங்கள் மற்றும் அந்தக் கணக்கின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் குடியரசுக் கணக்கு வருமானங்கள் மற்றும் செலவினங்களாக பதியப்படாததின் காரணமாக குடியரசுக் கணக்கிலிருந்து அரசாங்கத்தின் உண்மையான வருமானம் மற்றும் செலவினம் புலப்பட மாட்டாது.

5. அதனால், வைப்புக் கணக்கு இலக்கம் 6000 இன் கீழுள்ள 15 ஆம் இலக்கத் தொகுதியில் வைப்பு மற்றும் மாவட்டச் செயலகங்களுக்கான 6003 ஆம் இலக்க வைப்புக் கணக்கு சம்பந்தமாக இதன் பின்னர் பின்வரும் நடபடிமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன்.

5.1. 6000(15) தொகுதி மற்றும் 6003 இன் கீழ் காணப்படும் நானாவித வைப்பு சம்பந்தமான சகல பெறுவனவுகளுக்காகவும் பின்வரும் ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

(அ)உறுதியான வருமானக் குறியீட்டிலக்கத்தின் கீழ் அடையாளங் காணப்படக்கூடிய சகல வருமானங்களையும் உரிய வருமானக் குறியீட்டிலக்கத்திற்குப் பற்றுவைத்தல் வேண்டும்.

(ஆ) தொடர்ச்சியாக ஒன்றுதிரட்டப்படுகின்ற ஆனால் உறுதியான வருமானக் குறியீட்டிலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டில்லாத வருமானங்கள் தொடர்பில் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்திற்கு அறிவித்து புதிய வருமானக் குறியீட்டிலக்கத்தைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(இ) வைப்புக் கணக்கு இலக்கம் 6000 (15) தொகுதி மற்றும் 6003 இன் கீழ் காணப்படும் நானாவித வைப்புக்களில் உள்ளடங்கியுள்ள ஆனால் மேலே (அ) மற்றும் (ஆ) ஆகியவற்றின் கீழ் வராத ஏனைய சகல பெறுவனவுகளும் நானாவித வருமானக் குறியீட்டிலக்கம் 2003.02.99 இற்குப் பற்றுவைத்தல் வேண்டும்.

5.2 மேலே 5.1. கீழ் அடையாளங் காணப்படக்கூடிய சகல வருமானங்களையும் வைப்புக் கணக்கு வருமானங்களாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தக்க வைத்துக் கொள்ளக் கூடாது. அதேவேளையில் திரட்டப்படுகின்ற வமானத்திலிருந்து ஏதேனும் தொகையை செலவினங்களாக மேற்கொள்ள வேண்டியிருப்பின் அதற்குத் தேவையான ஏற்பாட்டினை வரவு செலவு மதிப்பீட்டினூடாக பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

5.3 அதன் பிரகாரம், 2015 ஜூலை மாதம் 31 ஆம் திகதியன்று நானாவித வைப்புக் கணக்கில் தக்க வைத்துள்ள நிலுவைகளை 2015 ஆம் ஆண்டில் முன்வரும் 05 மாதங்களுக்குள் செலுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற தொகையைத் தவிர எஞ்சியதை வருமானக் குறியீட்டிலக்கம் 2003.02.99 இற்குப் பற்றுவைக்க வேண்டிய அதேவேளையில், 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து மேலே 5.1. கீழ் தரப்பட்டுள்ள வருமானங்களை வைப்புக் கணக்கிற்குப் பற்றுவைக்கக் கூடாது. அதேபோன்று அந்த வருமானங்களைத் திரட்டுவது சம்பந்தமாக எதேனும் செலவினங்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுமாயின் அதற்குத் தேவையான வரவு செலவு ஏற்பாட்டினை 2016 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த மதிப்பீட்டினூடாக பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

5.4 மேலே 5.1. கீழ் கிடைக்கின்ற பெறுவனவுகளிலிருந்து ஏதேனும் தொகையொன்றை அரசாங்கத்தின் திரண்ட நிதியத்திற்கு பற்றுவைக்காது தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமாயின், அந்த வருமானங்களை இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ள வைப்புத் தொகுதிக்கு ஏற்புடையதாக்கிக் கொள்ள முடியுமாயின், அதற்காக அரச கணக்குகள் திணைக்களத்திலிருந்து மேற்சொன்ன வைப்புத் தொகுதியின் கீழ் தனியான வைப்புக் கணக்கு ஒன்றைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதேபோன்று மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் வருமானங்களை இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள வைப்புத் தொகுதிக்கு ஏற்புடையதாக்கிக் கொள்ள முடியாத போதும், அந்த வருமானங்கள் தொடர்ந்தும் திரட்டப்படுமாயின் அதற்கான போதிய தகவல்களை அரச கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலம் அதற்காக புதிய வைப்புக் கணக்கொன்றையும் இலக்கமொன்றையும் பெற்றுக் கொள்ள முடியும்.

6. இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை உறுதியாகப் பின்பற்ற வேண்டுமென வலியுறுத்தகின்ற அதேவேளையில், சுற்றறிக்கையில் அடங்கியுள்ள விடயங்கள் சம்பந்தமாக ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படுமானால் அரச கணக்குகள் திணைக்களத்தின் தொலைபேசி இலக்கம் 0112-484753 இன் மூலம் பணிப்பாளர் திரு ஏ.பீ. குரும்பலப்பிட்டிய அவர்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒப்பம்:

ஆர்.எச்.எஸ். சமரதுங்க

திறைசேரியின் செயலாளர்

பிரதி:

கணக்காய்வாளர் நாயகம்

# வைப்புத் தொகுதி

| வகை | விபரம் |
|---|---|
| 01 | பிணை வைப்புகள் |
| 02 | கேள்விமனு வைப்புகள |
| 04 | கூட்டுத்தாபனம் மற்றும் நிதியம் |
| 05 | அரசாங்கத்திற்கு உரிமைமாற்றப்பட்ட நிறுவனங்கள் |
| 06 | நிதியம் (சபை) |
| 07 | மிகையான தொகை |
| 08 | தேய்மான ஒதுக்கீட்டு நிதியம் |
| 09 | தற்காலிக கடன்பெறல் |
| 10 | வெளிநாட்டுதவி நன்கொடை |
| 11 | ஏற்பாட்டு வைப்புகள் |
| 12 | அவசர தேவைக்கான நிதியம் |
| 13 | தனியார் நிறுவனங்களினால் செய்யப்படுகின்ற வைப்புகள் |
| 14 | மாகாண சபைகளுக்கு வருமானங்களை மாற்றுதல் |